1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், அந்தக் குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசீலித்து இதுகுறித்து முடிவு செய்யலாம்.

தனியார் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு எடுக்கப்பட்ட ஆசிரியர்கள்.

* வினா எண் 759—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தனியார் தொடக்கப் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சியில் அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களுக்கான கல்வி இலாகாவின் ஆணை எண் 56461 / ந. 1/67 – 18, நாள் 6 - 1 - 70 சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்கள் முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) & (ஆ) தனியார் பள்ளிகளிலிருந்து 102 ஆசிரியர்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் உதவி ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு இன்னும் 6 - 1 - 70 நாளிட்ட 56461 / இ1/ 67 கல்வித்துறை அரசாணையின்படி ஊதியம் இன்னமும் திருத்தி அமைக்கப்படவில்லை. பரிசீலனையில் உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருவல்லிபுத்தூர் நகராட்சி குடி நீர் வழங்கு திட்டம்.

* வினா எண் 760—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சியின் குடிநீர் திட்டத்திற் கானஆய்வுத் தொகை ரூ. 20, 800 /— காட்டியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால், அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் குடிநீர் பிரச்னை ரொம்ப மோசமாக இருக்கிறது. ஒரு குடம் தண்ணீர் 25 பைசாவிற்கு விற்கிறது. பெண்கள் குடிநீருக்காக 2, 3 மைல்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். எவ்வளவு சீக்கிரம் செய்யப்படும் என்று கேளுங்கள். அதற்காக இவ்வளவு பெரிய விளக்கம் வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி: மழை நேரங்களில் எக்கச்சக்கமான தண்ணீர் வீணாகப் போகிறது. அதனால், அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்து, கோடைகாலத்தில் தண்ணீர் கொடுப்பது என்பதுதான் அந்த ஆய்வுத் திட்டம். அந்த ஆய்வுத் திட்டத்திற்காக அதிகாரிகள் வந்து போனார்கள்; காலம் கடத்தப்படுகிறது. எப்போது முடியும்? இந்த ஆண்டிலாவது தண்ணீர் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கடந்த 5-10-78 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. களப்பணி முடிந்தவுடன், மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். நான் ஒரு உறுதிமொழி தருகிறேன். அரசுக்கு வந்தால், சர்க்கார் அன்றைக்கே உத்தரவிடும். இதற்கும் சீக்கிரமாகச் செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இக்கேள்வி ஸ்ரீவில்லிபுத்தூரைப் பற்றியது என்பது ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரியும்; இருந்தாலும் அதையொட்டிக் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு உறுதிமொழியைக் கொடுத்தார்கள். அது வரவேற்கத் தக்கது. குடிதண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்க்க, இந்த திட்டம் இந்த ஆண்டிலே ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு என்று சொல்லி உறுதிமொழி கொடுப்பது சரியல்ல. எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ, 'as expeditiously as possible' அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
SATYAMEVA JAYATE / TRUTH ALONE TRIUMPHS